பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை / 9

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 18

முன்னுரை / 23

1 திறந்த மனதுடன் பாவன்னிப்புக் கோரல் / 27

2 ஃபிர்அவ்ன் மகளுக்கு தலைமுடிவாரிவிடும் பெண் / 31

3 நல்லவனும் கெட்டவனும் / 34

4 ஓர் இறைத்தூதரும் எறும்புப் புற்றும் / 36

5 அல்லாஹ்வின் அருள் / 37

6 கடன் கொடுத்து அதை வசூலிக்கும்போது
கடுமையாக நடந்துகொள்ளாதவர் / 39

7 நெருப்புக் குண்டவாசிகள் / 40

8 யூஷஃ என்ற இறைத்தூதருக்காக போரின் நேரத்தை
நீட்டிக்கும் வகையில் சூரியன் அஸ்தமிப்பதற்குக்
காலதாமதமான அற்புதம் / 47

9 அமானிதத்தை நிறைவேற்றல் / 49

10 அல்லாஹ் வழங்கிய அருள்வளத்திற்கு
நன்றி உணர்வோடு வாழ்தல் / 53

11 சொர்க்கத்தில் ஆதம் ﷺ அவர்களின் உடலைச்
சுற்றிவந்த இப்லீஸ் / 58

12 தாவூது ﷺ அவர்களின் மரணம் நிகழ்ந்த விதம் / 63

13 சபை நாகரீகம் / 65

14 நாயும் மனிதனும் / 67

15 ஜுரைஜின் வரலாறு / 69

16 மூஸா ﷺ அவர்களும் உயிரைப் பறிக்கும் வானவரும் / 74

17 அருள்வளம் பொருந்திய குடும்பம் / 80

18 பொறுமைசாலிகளின் தலைவர் / 92
19 வானிலிருந்து கீழே விழுந்த தங்கங்கள் / 95
20 இறைக்கட்டளைக்கு கட்டுப்பட்ட மேகக் கூட்டம் / 96
21 இறைமறுப்பின் பாதிப்புகள் குழந்தைகளைக்கூட தாக்கும் / 98
22 மூஸா ﷺ அவர்களும் அவர்களின் ஆடைகளைச் சுமந்துகொண்டு ஓடிய கல்லும் / 100
23 இறைமறுப்பும் மறதியும் தவறிழைப்பதும் மனிதனின் இயல்பே / 102
24 கண்ணால் பார்த்ததும் பொய் / 104
25 மனிதனுக்கு இருக்கும் ஆசைகள் / 105
26 தற்கொலை செய்துகொண்டவன் / 106
27 பாலைவனத்தில் தொலைந்து போன ஒட்டகம் திரும்பி வந்தால் / 107
28 பாவிகளுக்கு செய்கிற தர்மம் / 108
29 எகிப்தின் அரசி ஆசியா அம்மாள் / 110
30 இறைமார்க்கத்திற்காக பட்ட சிரமங்கள் / 111
31 அல்லாஹ்வுடைய அருளின்மீது நம்பிக்கை இழந்துவிடாதீர்கள் / 113
32 இறைத்தூதர் யூனுஸ் இப்னு மத்தா / 115
33 ஓநாய் கவ்விக்கொண்டு போன குழந்தை / 122
34 கட்டையால் ஆன இரு கால்கள் உடையவள் / 124
35 பேசிய ஓநாயும் இரு மாடுகளும் / 125
36 பாதி அளவே கொண்ட குழந்தை இறைத்தூதருக்கு வழங்கப்படல் / 127
37 கடல் பயணம் செய்தவர்கள் / 128
38 நிலமும் புதையலும் / 132
39 இறைத்தூதர் ஸாலிஹ் ﷺ அவர்களும் ஒட்டகமும் / 134
40 அல்லாஹ்விற்காக சகோதரர்களாய் பழகுவது / 136
41 இறைத்தூதர் இப்றாஹீம் ﷺ அவர்களும் கொடுமைக்கார அரசனும் / 137

42 மூஸா ﷺ அவர்களும் களிர் ﷺ அவர்களும் / 140
43 ஆதம் ﷺ அவர்களும் மூஸா ﷺ அவர்களும் தர்க்கம் செய்தது / 156
44 ஒற்றைக் கண்ணன் / 157
45 நபி ﷺ அவர்கள் கண்ட கனவு / 166
46 மிகப் பெரிய மீன் / 173
47 இறைத்தூதர் சுலைமான் செய்த பிரார்த்தனை / 175
48 வானத்திலிருந்து இறங்கிய உணவுத் தட்டு / 177
49 அறிஞர் லுக்மான் / 180
50 உசைர் / 183
51 யாசினின் குடும்பத்தார்கள் / 185
52 சனிக்கிழமையும் யூதர்களும் / 188
53 சிகரங்கள் உடையோர் / 193
54 சாமிரிய்யும் காளைமாடும் / 196
55 இறைவிசுவாசியும் இறைமறுப்பாளனும் / 208
56 கொடியவன் காரூன் / 212
57 ஹாமான் எனும் அயோக்கியன் / 217
58 மரணத்திற்கு பயந்து ஓடியவர்கள் / 220
59 அஸ்ஹாபுர் ரஸ்ஸி (கிணறுடையவர்கள்) / 222
60 அஸ்ஹாபுல் அய்கத்தி / 224
61 ஆது சமூகத்தார் / 230
62 ஸமூத் கூட்டத்தினர் / 241
63 ஓரினச் சேர்க்கையாளர்கள் / 255
64 துப்பஉ எனும் கூட்டத்தினர் / 264
65 குழம்பிய குட்டையில் மீன் பிடித்தவர்கள் / 267
66 துல் கர்னைன் எனும் பேரரசர் / 273
67 யானைப் படையினர் / 278
68 ஆதம் ﷺ அவர்களின் இரு புதல்வர்கள் / 283
69 கருப்புப் பெண்ணைக் காப்பாற்றிய பருந்து / 288

70 இறைத்தூதர் சுலைமான் ﷺ அவர்களும்
உயிர் பிராணிகளும் / 291

71 கொலை செய்தவன் யார்? / 299

72 வானத்திலிருந்து இறங்கிய பெட்டி / 304

73 குகைவாசிகள் / 310

74 மர்யமின் தனித்துவம் / 314

75 ஈயால் சொர்க்கம் சென்றவரும் நரகம் சென்றவரும் / 318

76 கொடை வள்ளல் அப்துல்லாஹ் அபூ ஜுத்ஆன் / 320

4

ஓர் இறைத்தூதரும் எறும்புப் புற்றும்

✿

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

قَرَصَتْ نَمْلَةٌ نَبِيًّا مِنَ الأَنْبِيَاءِ فَأَمَرَ بِقَرْيَةِ النَّمْلِ فَأُحْرِقَتْ فَأَوْحَى اللَّهُ إِلَيْهِ أَنْ قَرَصَتْكَ نَمْلَةٌ أَحْرَقْتَ أُمَّةً مِنَ الأُمَمِ تُسَبِّحُ

இறைத்தூதர்களில் ஒருவரை எறும்பு ஒன்று கடித்துவிட்டது. உடனே அந்த எறும்புப் புற்றையே எரித்துவிடும்படி அவர் கட்டளையிட்டார். அவ்வாறே அது எரிக்கப்பட்டுவிட்டது. (இதைக் கண்ட) அல்லாஹ், 'ஓர் எறும்பு உம்மைக் கடித்து விட்ட காரணத்தால் அல்லாஹ்வைத் துதித்துக்கொண்டிருந்த சமூதாயங்களில் ஒன்றையே நீர் எரித்துவிட்டீரே!' என்று அவருக்கு அறிவித்தான். (அறிவிப்பு: அபூ ஹுரைரா ؓ, புகாரீ 3019, முஸ்லிம் 2241)

8

யூஷஃ என்ற இறைத்தூதருக்காக போரின் நேரத்தை நீட்டிக்கும் வகையில் சூரியன் அஸ்தமிப்பதற்குத் காலதாமதமான அற்புதம்

✿

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

غَـزَا نَبِيٌّ مِنَ الأَنْبِيَاءِ فَقَالَ لِقَوْمِهِ لاَ يَتْبَعْنِي رَجُلٌ مَلَكَ بُضْعَ امْرَأَةٍ وَهْوَ يُرِيدُ أَنْ يَبْنِيَ بِهَا وَلَمَّا يَبْنِ بِهَا، وَلاَ أَحَدٌ بَنَى بُيُوتًا وَلَمْ يَرْفَعْ سُـقُوفَهَا، وَلاَ أَحَدٌ اشْـتَرَى غَنَمًا، أَوْ خَلِفَـاتٍ وَهْـوَ يَنْتَظِرُ وِلاَدَهَا فَغَزَا فَدَنَا مِنَ الْقَرْيَةِ صَلاَةَ الْعَـصْرِ، أَوْ قَرِيبًا مِنْ ذَلِكَ فَقَالَ لِلشَّـمْسِ إِنَّكِ مَأْمُورَةٌ وَأَنَا مَأْمُورٌ اللَّهُمَّ احْبِسْهَا عَلَيْنَا فَحُبِسَتْ حَتَّى فَتَحَ اللَّهُ عَلَيْهِ فَجَمَعَ الْغَنَائِمَ فَجَاءَتْ، يَعْنِي النَّارَ - لِتَأْكُلَهَا فَلَمْ تَطْعَمْهَا

இறைத்தூதர்களில் ஒருவர் அறப் போருக்குச் சென்றார். அப்போது அவர் தம் சமுதாயத்தாரிடம், 'ஒரு பெண்ணிடம் இல்லற உரிமையைப் பெற்றவர் அவளுடன் தாம்பத்தியம் தொடங்க விரும்பி இன்னும் தொடங்காமல் இருந்தால், அவர் என்னைப் பின்பற்றி (போருக்கு) வர வேண்டாம். வீடு கட்டி முடித்து, அதன் கூரையை (இன்னும்) உயர்த்தாமலிருப்பவரும் என்னைப் பின்பற்றி (போருக்கு) வர வேண்டாம். ஆட்டையோ, பெண் ஒட்டகங்களையோ வாங்கிவிட்டு, அவை குட்டிகள் போடுவதை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவரும் என்னைப் பின்பற்றி (போருக்கு) வர வேண்டாம்' என்று கூறிவிட்டுப் போருக்குச் சென்றார்.

ஓர் ஊரை (ஜெரிக்கோ நகரை வெள்ளிக்கிழமை) அஸ்ர் தொழுகையின் நேரத்தில், அல்லது சற்றேறக் குறைய அந்த வேளையில் அவர் நெருங்கினார். (சற்று நேரத்தில் சூரியன் மறையத் தொடங்க, சனிக்கிழமை போரிடுவது அவர்களுக்கு

11

சொர்க்கத்தில் ஆதம் ﷺ அவர்களின் உடலைச் சுற்றிவந்த இப்லீஸ்

✿

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

لَمَّا صَوَّرَ اللَّهُ آدَمَ فِي الْجَنَّةِ تَرَكَهُ مَا شَاءَ اللَّهُ أَنْ يَتْرُكَهُ فَجَعَلَ إِبْلِيسُ يُطِيفُ بِهِ يَنْظُرُ مَا هُوَ فَلَمَّا رَآهُ أَجْوَفَ عَرَفَ أَنَّهُ خُلِقَ خَلْقًا لاَ يَتَمَالَكُ

அல்லாஹ் (முதல் மனிதர்) ஆதம் ﷺ அவர்களைச் சொர்க்கத்தில் (களிமண்ணால்) படைத்து, தான் நாடிய காலம்வரை அப்படியே விட்டுவிட்டான். இப்லீஸ் அதைச் சுற்றி வந்து அது என்னவென்று உற்றுப் பார்க்கலானான். வயிறு உள்ளதாக அதைக் கண்டபோது 'தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொள்ள முடியாத (கட்டுப்பாடற்ற) படைப்பாகவே அது படைக்கப்பட்டுள்ளது' என அவன் அறிந்துகொண்டான். (அறிவிப்பு: அனஸ் ﷺ, முஸ்லிம் 2611)

ஆதமின் உருவத்தைப் பார்த்தப் பிறகு இப்லீஸுக்கு இறுமாப்பும் மமதையும் உண்டானது. சுட்ட களிமண்ணால் செய்யப்பட்ட ஒரு சதைப் பிண்டம். இதற்கு இத்துனை மதிப்பா என ஆதம் ﷺ அவர்களை இளக்காரமாகப் பார்த்தான். 'இந்தப் பிண்டத்தைவிட நான் எவ்வளவோ உயர்ந்தவன். என் திறமைகள், வல்லமைகள் இதனிடம் உண்டா?' என்றெல்லாம் தனக்குள் பெருமையடித்துக்கொண்டனான்.

இந்த மனநிலையில் அவன் இருக்கும்போதுதான் அல்லாஹ் ஆதமிற்கு ஸஜ்தா செய்யும்படிக் கட்டளையிட்டான்.

وَإِذْ قُلْنَا لِلْمَلَائِكَةِ اسْجُدُوا لِآدَمَ فَسَجَدُوا إِلَّا إِبْلِيسَ أَبَى وَاسْتَكْبَرَ وَكَانَ مِنَ الْكَافِرِينَ

14

நாயும் மனிதனும்

✿

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

بَيْنَا رَجُلٌ يَمْشِي فَاشْتَدَّ عَلَيْهِ الْعَطَشُ فَنَزَلَ بِئْرًا فَشَرِبَ مِنْهَا ثُمَّ خَرَجَ فَإِذَا هُوَ بِكَلْبٍ يَلْهَثُ يَأْكُلُ الثَّرَى مِنَ الْعَطَشِ فَقَالَ لَقَدْ بَلَغَ هَذَا مِثْلُ الَّذِي بَلَغَ بِي فَمَلأَ خُفَّهُ ثُمَّ أَمْسَكَهُ بِفِيهِ ثُمَّ رَقِيَ فَسَقَى الْكَلْبَ فَشَكَرَ اللَّهُ لَهُ فَغَفَرَ لَهُ قَالُوا : يَا رَسُولَ اللهِ وَإِنَّ لَنَا فِي الْبَهَائِمِ أَجْرًا قَالَ فِي كُلِّ كَبِدٍ رَطْبَةٍ أَجْرٌ.

ஒரு மனிதர் (ஒரு பாதையில்) நடந்து சென்றுகொண் டிருந்தபோது அவருக்குக் கடுமையான தாகம் ஏற்பட்டது. உடனே, அவர் (அங்கிருந்த) ஒரு கிணற்றில் இறங்கி, அதிலிருந்து (தண்ணீரை அள்ளிக்) குடித்தார். பிறகு, (கிணற் றிலிருந்து) அவர் வெளியே வந்தபோது, நாய் ஒன்று தாகத்தால் தவித்து, நாக்கைத் தொங்கவிட்டபடி ஈர மண்ணை நக்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். அவர் (தம் மனத்திற்குள்) 'எனக்கு ஏற்பட்டதைப் போன்ற அதே கடுமையான தாகம் இந்த நாய்க்கும் ஏற்பட்டிருக்கின்றது போலும்' என்று எண்ணிக்கொண்டார்.

உடனே (மீண்டும் கிணற்றில் இறங்கித் தண்ணீரைத்) தனது காலுறையில் நிரப்பிக்கொண்டு, அதை வாயால் கவ்விக்கொண்டு, மேலே ஏறி வந்து அந்த நாய்க்குப் புகட்டி னார். அவருடைய இந்த நற்செயலை அல்லாஹ் ஏற்று அவரை (அவருடைய பாவங்களை) மன்னித்தான் என்று அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்.

இதைச் செவியுற்ற நபித்தோழர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! கால்நடைகள் (மற்றும் பிராணிகளுக்கு உதவும்) விசயத்திலும் எங்களுக்குப் பலன் கிடைக்குமா?' என்று கேட்டார்கள். நபி

22

மூஸா ﷺ அவர்களும் அவர்களின் ஆடைகளைச் சுமந்துகொண்டு ஓடிய கல்லும்

✿

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ مُوسَى كَانَ رَجُلًا حَيِيًّا سِتِّيرًا، لاَ يُرَى مِنْ جِلْدِهِ شَيْءٌ اسْتِحْيَاءً مِنْهُ، فَآذَاهُ مَنْ آذَاهُ مِنْ بَنِي إِسْرَائِيلَ فَقَالُوا: مَا يَسْتَتِرُ هَذَا التَّسَتُّرَ إِلَّا مِنْ عَيْبٍ بِجِلْدِهِ: إِمَّا بَرَصٌ وَإِمَّا أُدْرَةٌ: وَإِمَّا آفَةٌ، وَإِنَّ اللَّهَ أَرَادَ أَنْ يُبَرِّئَهُ مِمَّا قَالُوا لِمُوسَى، فَخَلاَ يَوْمًا وَحْدَهُ، فَوَضَعَ ثِيَابَهُ عَلَى الحَجَرِ، ثُمَّ اغْتَسَلَ، فَلَمَّا فَرَغَ أَقْبَلَ إِلَى ثِيَابِهِ لِيَأْخُذَهَا، وَإِنَّ الحَجَرَ عَدَا بِثَوْبِهِ، فَأَخَذَ مُوسَى عَصَاهُ وَطَلَبَ الحَجَرَ، فَجَعَلَ يَقُولُ: ثَوْبِي حَجَرُ، ثَوْبِي حَجَرُ، حَتَّى انْتَهَى إِلَى مَلَإٍ مِنْ بَنِي إِسْرَائِيلَ، فَرَأَوْهُ عُرْيَانًا أَحْسَنَ مَا خَلَقَ اللَّهُ، وَأَبْرَأَهُ مِمَّا يَقُولُونَ، وَقَامَ الحَجَرُ، فَأَخَذَ ثَوْبَهُ فَلَبِسَهُ، وَطَفِقَ بِالحَجَرِ ضَرْبًا بِعَصَاهُ، فَوَاللَّهِ إِنَّ بِالحَجَرِ لَنَدَبًا مِنْ أَثَرِ ضَرْبِهِ، ثَلاَثًا أَوْ أَرْبَعًا أَوْ خَمْسًا، فَذَلِكَ قَوْلُهُ: يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لاَ تَكُونُوا كَالَّذِينَ آذَوْا مُوسَى فَبَرَّأَهُ اللَّهُ مِمَّا قَالُوا وَكَانَ عِنْدَ اللَّهِ وَجِيهًا ’

மூஸா ﷺ அவர்கள் மிகவும் வெட்கப்படுபவர்களாகவும் அதிகமாக (தம் உடலை) மறைத்துக் கொள்பவர்களாகவும் இருந்தார்கள். அவர்களின் மேனியிலிருந்து சிறிதளவு கூட வெளியே தெரியாது. அவர்கள் (அதிகமாக) வெட்கப்பட்ட காரணத்தால்தான் இப்படி தம் உடலை அவர்கள் மறைத்துக் கொண்டார்கள். அப்போது, பனூ இஸ்ராயீல்களில் அவர்களுக்கு மனவேதனை தர விரும்பியவர்கள் அவர்களுக்குத் துன்பம் தந்தனர்; ‘இவருடைய சருமத்தில் ஏதோ குறைபாடு இருப்பதால் தான் இந்த அளவிற்கு இவர் (தன் மேனியை) மறைத்துக்கொள்கிறார். (இவருக்குக்) தொழுநோய் இருக்க வேண்டும்; அல்லது குடலிறக்க நோய் இருக்க வேண்டும்’

35

பேசிய ஓநாயும் இரு மாடுகளும்

✿

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

صَلَّى رَسُولُ اللهِ صلى الله عليه وسلم صَلاَةَ الصُّبْحِ ثُمَّ أَقْبَلَ عَلَى النَّاسِ فَقَالَ بَيْنَا رَجُلٌ يَسُوقُ بَقَرَةً إِذْ رَكِبَهَا فَضَرَبَهَا فَقَالَتْ إِنَّا لَمْ نُخْلَقْ لِهَذَا إِنَّمَا خُلِقْنَا لِلْحَرْثِ فَقَالَ النَّاسُ سُبْحَانَ اللهِ بَقَرَةٌ تَكَلَّمُ فَقَالَ فَإِنِّي أُومِنُ بِهَذَا أَنَا ، وَأَبُو بَكْرٍ وَعُمَرُ - وَمَا هُمَا ثَمَّ - وَبَيْنَمَا رَجُلٌ فِي غَنَمِهِ إِذْ عَدَا الذِّئْبُ فَذَهَبَ مِنْهَا بِشَاةٍ فَطَلَبَ حَتَّى كَأَنَّهُ اسْتَنْقَذَهَا مِنْهُ فَقَالَ لَهُ الذِّئْبُ هَذَا اسْتَنْقَذْتَهَا مِنِّي فَمَنْ لَهَا يَوْمَ السَّبُعِ يَوْمَ لاَ رَاعِيَ لَهَا غَيْرِي فَقَالَ النَّاسُ سُبْحَانَ اللهِ ذِئْبٌ يَتَكَلَّمُ قَالَ فَإِنِّي أُومِنُ بِهَذَا أَنَا ، وَأَبُو بَكْرٍ وَعُمَرُ وَمَا هُمَا ثَمَّ.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் ஃபஜ்ர் தொழுகை தொழுதார்கள். பிறகு மக்களை நோக்கி, '(இஸ்ரவேலர்களில்) ஒரு மனிதர் ஒரு பசுமாட்டை ஓட்டிச் சென்றுகொண்டிருக்கையில் அதில் ஏறினார். பிறகு அதை அடித்தார். அப்போது அந்தப் பசுமாடு, 'நாங்கள் இதற்காக (மனிதர்களாகிய உங்களைச் சுமந்து செல்வதற்காகப்) படைக்கப்படவில்லை. நாங்கள் படைக்கப்பட்டது (நிலத்தை) உழுவதற்காகத்தான்' என்று கூறியது எனச் சொன்னார்கள்.

மக்கள், 'சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் தூயவன்!) பசுமாடு பேசுமா?' என்று (வியந்து) கூறினார்கள். இதைக் கேட்ட நபி ﷺ அவர்கள், 'நானும் அபூ பக்ரும் உமரும் இதை நம்புகிறோம்' என்று சொன்னார்கள். அப்போது அங்கே அபூ பக்ர் ؓ அவர்களும் உமர் ؓ அவர்களும் இருக்கவில்லை.

தொடர்ந்து, நபி ﷺ அவர்கள், 'ஒரு மனிதர் தன் ஆடுகளுக்கிடையே (அவற்றை மேய்த்துக்கொண்டு) இருந்தபோது

41

இறைத்தூதர் இப்றாஹீம் ﷺ அவர்களும் கொடுமைக்கார அரசனும்

✿

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

هَاجَرَ إِبْرَاهِيمُ - عَلَيْهِ السَّلاَمُ - بِسَارَةَ فَدَخَلَ بِهَا قَرْيَةً فِيهَا مَلِكٌ مِنَ الْمُلُوكِ ، أَوْ جَبَّارٌ مِنَ الْجَبَابِرَةِ فَقِيلَ دَخَلَ إِبْرَاهِيمُ بِامْرَأَةٍ هِيَ مِنْ أَحْسَنِ النِّسَاءِ فَأَرْسَلَ إِلَيْهِ أَنْ يَا إِبْرَاهِيمُ مَنْ هَذِهِ الَّتِي مَعَكَ قَالَ أُخْتِي ثُمَّ رَجَعَ إِلَيْهَا فَقَالَ : لاَ تُكَذِّبِي حَدِيثِي فَإِنِّي أَخْبَرْتُهُمْ أَنَّكِ أُخْتِي وَاللَّهِ إِنْ عَلَى الأَرْضِ مُؤْمِنٌ غَيْرِي وَغَيْرُكِ فَأَرْسَلَ بِهَا إِلَيْهِ فَقَامَ إِلَيْهَا فَقَامَتْ تَوَضَّأُ وَتُصَلِّي فَقَالَتِ اللَّهُمَّ إِنْ كُنْتُ آمَنْتُ بِكَ وَبِرَسُولِكَ وَأَحْصَنْتُ فَرْجِي إِلاَّ عَلَى زَوْجِي فَلاَ تُسَلِّطْ عَلَيَّ الْكَافِرَ فَغُطَّ حَتَّى رَكَضَ بِرِجْلِهِ قَالَ الأَعْرَجُ قَالَ أَبُو سَلَمَةَ بْنُ عَبْدِ الرَّحْمَنِ إِنَّ أَبَا هُرَيْرَةَ قَالَ : قَالَتِ اللَّهُمَّ إِنْ يَمُتْ يُقَالُ هِيَ قَتَلَتْهُ فَأُرْسِلَ ثُمَّ قَامَ إِلَيْهَا فَقَامَتْ تَوَضَّأُ تُصَلِّي وَتَقُولُ اللَّهُمَّ إِنْ كُنْتُ آمَنْتُ بِكَ وَبِرَسُولِكَ وَأَحْصَنْتُ فَرْجِي إِلاَّ عَلَى زَوْجِي فَلاَ تُسَلِّطْ عَلَيَّ هَذَا الْكَافِرَ فَغُطَّ حَتَّى رَكَضَ بِرِجْلِهِ قَالَ عَبْدُ الرَّحْمَنِ قَالَ أَبُو سَلَمَةَ قَالَ أَبُو هُرَيْرَةَ فَقَالَتِ اللَّهُمَّ إِنْ يَمُتْ فَيُقَالُ هِيَ قَتَلَتْهُ فَأُرْسِلَ فِي الثَّانِيَةِ ، أَوْ فِي الثَّالِثَةِ فَقَالَ وَاللَّهِ مَا أَرْسَلْتُمْ إِلَيَّ إِلاَّ شَيْطَانًا ارْجِعُوهَا إِلَى إِبْرَاهِيمَ وَأَعْطُوهَا آجَرَ فَرَجَعَتْ إِلَى إِبْرَاهِيمَ - عَلَيْهِ السَّلاَمُ - فَقَالَتْ أَشَعَرْتَ أَنَّ اللَّهَ كَبَتَ الْكَافِرَ وَأَخْدَمَ وَلِيدَة.

(இறைத்தூதர்) இப்ராஹீம் ﷺ அவர்கள் (தம் துணைவியார்) சாராவுடன் புலம்பெயர்ந்து (இராக்கிலிருந்து) வெளியேறினார்கள். மன்னன் ஒருவன், அல்லது கொடுங்கோலன் ஒருவன் ஆட்சிபுரிந்த ஓர் ஊருக்குள் (எகிப்துக்குள்) 'சாரா' உடன் இப்ராஹீம் ﷺ அவர்கள் நுழைந்தார்கள். 'பெண்களிலேயே மிக அழகான ஒரு பெண்ணுடன் இப்ராஹீம் வந்திருக்கிறார்'

69

கருப்புப் பெண்ணைக் காப்பாற்றிய பருந்து

✿

أَسْـلَمَتِ امْرَأَةٌ سَوْدَاءُ لِبَعْضِ الْعَرَبِ ، وَكَانَ لَهَا حِفْشٌ فِي الْمَسْجِدِ قَالَتْ فَكَانَتْ تَأْتِينَا فَتَحَدَّثُ عِنْدَنَا فَإِذَا فَرَغَتْ مِنْ حَدِيثِهَا قَالَتْ وَيَوْمُ الْوِشَاحِ مِنْ تَعَاجِيبِ رَبِّنَا أَلاَ إِنَّهُ مِنْ بَلْدَةِ الْكُفْرِ أَنْجَانِي. فَلَمَّا أَكْثَرَتْ قَالَتْ لَهَا عَائِشَـةُ وَمَا يَوْمُ الْوِشَاحِ قَالَتْ خَرَجَتْ جُوَيْرِيَةٌ لِبَعْضِ أَهْلِي وَعَلَيْهَا وِشَـاحٌ مِنْ أَدَمٍ فَسَقَطَ مِنْهَا فَانْحَطَّتْ عَلَيْهِ الْحُدَيَّا وَهْيَ تَحْسِـبُهُ لَحْمًا فَأَخَذَتْ فَاتَّهَمُونِي بِهِ فَعَذَّبُونِي حَتَّى بَلَـغَ مِنْ أَمْرِي أَنَّهُمْ طَلَبُوا فِي قُبُلِي فَبَيْنَا هُمْ حَوْلِي وَأَنَا فِي كَرْبِي إِذْ أَقْبَلَتِ الْحُدَيَّا حَتَّى وَازَتْ بِرُؤُوسِـنَا ثُمَّ أَلْقَتْهُ فَأَخَذُوهُ فَقُلْتُ لَهُمْ هَذَا الَّذِي اتَّهَمْتُمُونِي بِهِ وَأَنَا مِنْهُ بَرِيئَةٌ

ஓர் அரபுக் கோத்திரத்திற்குச் சொந்தமான கறுப்பு (நிற அடிமைப்) பெண் ஒருத்தி இஸ்லாமை ஏற்றுக்கொண்டாள். அவளுக்குப் பள்ளிவாசலில் சிறிய (தங்கும்) அறையொன்று இருந்தது. அவள் எங்களிடம் வந்து பேசிக்கொண்டிருப்பாள். அவள் பேசி முடிக்கும்போது, 'அரையணித் தோள்பட்டிகை (காணாமற் போன) நாள் எமது இறைவனின் விந்தைகளில் ஒன்றாகும். அந்த நாள் இறைமறுப்பு (மேலோங்கி) இருந்த ஊரிலிருந்து என்னை (வெளியேற்றிக்) காப்பாற்றிவிட்டது' என்று பாடுவாள். இவ்வாறு அவள் அதிகமாகப் பாடுவதைக் கேட்ட நான், 'அரையணித் தோள்பட்டிகை நாள் என்றால் என்ன?' என்று கேட்டேன். அதற்கு அவள் சொன்னாள்: என் (எஜமானியர்) குடும்பத்தாரில் ஒருவருக்குரிய சிறுமி ஒருத்தி (மணப்பெண்ணாக இருந்ததால்) பதனிடப்பட்ட தோலால் ஆன (சிவப்பு) அரையணித் தோள்பட்டிகை ஒன்றை அணிந்து கொண்டு (குளியலறைக்குச்) சென்றாள். அப்போது அந்தப் பட்டிகை (எதிர்பாராத விதமாக) அவளிட